Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், அக்டோபர் 01, 2024 | இதழ் 171

# இனப் பகைவர்களும் - அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல்களுக்கு நேரம் கொடுக்கக் கூடாது! முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, 01 அக் 2024: கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செப்டம்பர் மாதத்தைத் திராவிட மாதமாகக் கொண்டாடி வருகிறது. திராவிட மாதத்தின் நிறைவுநாளான இன்று (30-09-2024) கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் யூடியூப் பக்கத்தில் சிறப்புரையாற்றினார்.

அதன் விவரம் வருமாறு: வணக்கம். ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை திராவிட மாதமாக நாம் கொண்டாடி வருகிறோம். நம்முடைய வரலாறு, சாதனைகள், பல்வேறு அரசியல் விவகாரங்களில் திராவிடப் பார்வை என்று, கழக முன்னோடிகள், பேச்சாளர்கள், தோழமை இயக்கத்தைச் சார்ந்த தலைவர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் எனப் பலரையும் "திராவிட மாதம்" நிகழ்ச்சியில் பேச வைத்து, பயனுள்ள - கருத்துள்ள முன்னெடுப்பை நம்முடைய ஐ.டி. விங் செய்கிறது.

அதிலும் இது பவள விழா நிறைவு ஆண்டு. நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து - கடந்த காலத்தை எடைபோட்டு, நாம் அடுத்து நடைபோட வேண்டிய பாதையைத் தீர்மானிக்க கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பு.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உரிமைகள் மறுக்கப்பட்டு - வாய்ப்புகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தமிழினம் மேலெழுந்து வந்த வரலாறுதான் நம்முடைய தி.மு.க. வரலாறு! இந்த இனம் இழிவில் இருந்து மீள வேண்டும் என்றுதான், சுயமரியாதையையும் - பகுத்தறிவுச் சிந்தனையையும் ஊட்டினார் தந்தை பெரியார். அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்த்தினார் பேரறிஞர் அண்ணா. "கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்" என்று முழங்கிச் சட்டங்களும் திட்டங்களும் வகுத்துச் சமூகத்தின் மேடுபள்ளங்களைச் சமன்படுத்த உழைத்தார் நம்முடைய தலைவர் கலைஞர். தலைவர் கலைஞரின் உழைப்புதான் கழகத்தைப் பாதுகாத்தது. அவர் விட்டுச் சென்றுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு - கடமை நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டிருக்கிறது! அந்தக் கடமையை, 'நமக்கு நாமே' நினைவூட்டிக் கொள்வதற்கான வாய்ப்புதான் இதுபோன்ற நிகழ்ச்சிகள்!

குறிப்பாக, இந்தாண்டு "உலகெங்கும் திராவிடம்" என்று, திராவிட இயக்க கொள்கைகளால் - சட்டத்திட்டங்களால் உலகத்தின் பல நாடுகளிலும் தமிழர்கள் சிறப்பான நிலையில் இருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் நிறைய வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். இதற்காக ஐ.டி. விங்கையும் - அயலக அணியையும் பாராட்டுகிறேன்!

இன்றைக்கு நம்முடைய இளைஞர்கள் உலகெங்கும் பல்வேறு நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளில் இருக்கிறார்கள். இதற்குப் பின்னால், நம்முடைய சமூகநீதிக் கொள்கை, தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் பொது நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது, முதல் தலைமுறைப் பட்டதாரிகளின் தொழிற்கல்விக்கான கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் இருக்கிறது.

நாம் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டமும் ஒரு படிக்கட்டு. ஒவ்வொரு படிக்கட்டிலும் ஒவ்வொருவர் ஏறும்போதும், ஒரு தலைமுறையே முன்னேறுகிறது! இந்த முன்னேற்றம்தான் நாம் காண விரும்பும் வளர்ச்சி!

இவ்வாறு வளர்ச்சியடைந்த பலரின் வீடியோக்களையும் பதிவு செய்திருக்கிறார்கள். வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, அவர்களின் அனுபவத்தை மற்றவர்களுக்கு வழிகாட்டும், 'கைடாக' மாற்றியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருமே சாமானியர்கள். என்னைப் போன்று - உங்களை போன்று எளிய பின்னணியில் இருந்து வந்தவர்கள். கற்ற கல்வியால் - பெற்ற வாய்ப்புகளால் - உழைத்த உழைப்பால் இன்றைக்கு உயரங்களில் இருக்கிறார்கள். இந்த உயரத்துக்கான பாதைதான், சமூகநீதி!

திராவிட இயக்கத்தின் சமூகநீதிப் போராட்ட வரலாற்றை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைத் திட்டங்களைத் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தில் மட்டும் சொல்லி முடித்துவிட முடியாது. எனவே, இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்க வேண்டும். ஆக்கப்பூர்வமான கருத்துகள் விவாதிக்கப்பட வேண்டும். பயனுள்ள கருத்தாக்கங்களை நீங்கள் உருவாக்க வேண்டும்.

இனப் பகைவர்களும் - அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல்களுக்கு நீங்கள் நேரம் கொடுக்கக் கூடாது. சமூக ஊடகங்களில் என்ன 'டிஸ்கஸ்' செய்கிறீர்கள் என்று நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கு பேசப்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

பொய்களையும் - அவதூறுகளையும் - பாதி உண்மைகளை மட்டும் சொல்லிச் சிலர் குழப்புவார்கள். அதற்கு நீங்கள் யாரும் ஏமாந்துவிடக் கூடாது. எந்தச் செய்தி வந்தாலும் 'எமோஷனலாக' மட்டும் அணுகாதீர்கள்; அந்தச் செய்தி பற்றிய உண்மைத்தன்மையைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அந்தப் பொய்யைப் பரப்புறவர்களுக்கு இல்லாத இரண்டு, நம்மிடம் இருக்கிறது. அதுதான் தந்தை பெரியார் சொன்ன மானமும் அறிவும், மனிதருக்கு அழகு! எனவே, கவனமுடன் கடமையை ஆற்றுங்கள்! என்றும் வெற்றி நமதே! நன்றி! வணக்கம்! இவ்வாறு அவர் உரையாற்றினார்.



# சிறுநீரகத்துக்கு செல்லும் ரத்த நாளத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டது அப்பல்லோ மருத்துவமனையில் ஆஞ்சியோ சிகிச்சை ஐசியூவில் ரஜினி

சென்னை, 01 அக் 2024: சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நடிகர் ரஜினி காந்துக்கு ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவர் ஐசியூவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிகிக்சைக்கு பின் கண் ரஜினிகாந்த் பின்னர் தனக்கு சிகிச்சை அளித்த டாக்டர்களுக்கு நன்றி தெரிவித்தார். இன்னும் ஓரிரு நாளில் அவர் வீடு திரும்புவார் என தெரிகிறது.

அவரை பார்க்க யாரும் மருத்துவமனைக்கு வர வேண்டாம் என்று அவரது மனைவி லதா ரஜினிகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் ஏற்கனவே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர். அவருக்கு சீரற்ற ரத்த ஓட்டம், செரிமானக் கோளாறுகள் உள்ள நிலையில் நேற்று இரவு வயிற்றுப்பகுதியில் வீக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அவர், சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்தனர். இந்த தகவல் காட்டு தீ போல் பரவியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று நள்ளிரவு வரை ரஜினிகாந்த் உடல்நிலை குறித்த தகவல் பரவியபடி இருந்தது. அப்போலோ ஆஸ்பத்திரி முன்பும் பல ரசிகர்கள் திரண்டு வந்தனர்.

இந்த நிலையில் நடிகர் ரஜினிகாந்திற்கு சிறுநீரகத்துக்கு செல்லும் ரத்தநாளத்தில் அடைப்பு கண்டறியப்பட்டதால் அவருக்கு ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இது 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செய்யக் கூடிய அதிநவீன அறுவை சிகிச்சை என கூறப்படுகிறது.

ரஜினி எப்படி இருக்கிறார், அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் குறித்து அப்பல்லோ மருத்துவமனை டாக்டர்கள் கூறுகையில், ரஜினிக்கு கடந்த 10 நாட்களுக்கும் மேலாக சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை இருந்து வந்துள்ளது. அடிவயிறு சற்று வீக்கம் ஏற்பட்டு வலியும் இருந்து வந்த நிலையில்தான், டாக்டர்களின் பரிந்துரைப்படி மருந்துகளையும் சில மருத்துவப் பரிசோதனையும் எடுத்துக்கொண்டுள்ளார்.

மருத்துவப் பரிசோதனை முடிவுகள் வந்த நிலையில் நேற்று இரவு ரஜினி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு ஏற்கனவே சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பதால், அதில் ஏதேனும் பிரச்னை இருக்குமா என்ற கோணத்தில்தான் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது. பரிசோதனையில் சிறுநீரகத்துக்கு செல்லும் நரம்பில் சதை வளர்ந்து இருப்பதால், அதுதான் வீக்கம் மற்றும் சிறுநீர் கழிப்பதில் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதை டாக்டர்கள் கண்டறிந்தனர்.

இதய சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் துறை நிபுணர்கள், சிறுநீரக சிகிச்சை மருத்துவர்கள் என பல துறை டாக்டர்கள் இணைந்து ரஜினிக்கு சிகிச்சை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

திட்டமிட்டபடி இன்று அதிகாலை ரஜினிக்கு சிகிச்சை தொடங்கியது. சதை வளர்ந்திருக்கும் அந்த நரம்புப் பகுதியில் சிகிச்சை செய்து, அங்கு ஸ்டென்ட் வைக்கப்பட்டுள்ளது. இதற்காக, ரஜினியின் தொடைப் பகுதியில் இருந்து நரம்பு வழியாக ஸ்டென்ட் உள்செலுத்தப்பட்டு காலை 5 மணிக்குத் தொடங்கிய அறுவை சிகிச்சை 3 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொதுவாகவே ரத்த நாளங்கள் அல்லது நரம்பு தொடர்பான பிரச்னைகளுக்கு இந்த ஸ்டென்ட் பயன்படுத்தப்படுகிறது.

ரஜினிக்கு சிறுநீரகத்துக்குச் செல்லும் ரத்த நாளத்தில் ஸ்டென்ட் பொறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அவர் ஒரு சில நாள்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். பிறகு அவர் வழக்கம் போல தனது பணிகளைத் தொடர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த 24 மணி நேரத்திற்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் (ஐசியூ) இருப்பார். அதன் பின்னர் சாதாரண வார்டுக்கு மாற்றப்படுவார். இருதய சிகிச்சை சிறப்பு டாக்டர் சாய் சதீஷ் தலைமையில் மருத்துவக்குழுவினர் நடிகர் ரஜினியின் உடல்நிலையை கண்காணித்து வருகின்றனர். ஆனால் இதுவரை மருத்துவமனை சார்பில் அதிகாரப்பூர்வ அறிக்கை ஏதும் வெளியாகவில்லை.



சிகிச்சைக்கு பின் கண் விழித்த ரஜினிகாந்த், தனக்கு சிகிச்சை அளித்த டாக்டர்களுக்கு நன்றி தெரிவித்தார். இன்னும் ஓரிரு நாளில் அவர் வீடு திரும்புவார் என தெரிகிறது. இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் விரைந்து நலம் பெற விழைகிறேன்' என பதிவிட்டுள்ளார்.

இதேபோல் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, "ரஜினிகாந்த் விரைவாகவும் சீராகவும் குணமடைய உலகெங்கிலும் உள்ள அவரது கோடிக்கணக்கான ரசிகர்களுடன் சேர்ந்து நானும் வேண்டிக் கொள்கிறேன்." என எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# சுகாதாரத் தலைவர்கள் ஒன்றுகூடும் 2வது ஏ எச் பி ஐ தலைமைத்துவ உச்சிமாநாடு 2024 ! இந்தியா முழுவதும் சுகாதார சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் சேவைகள் மேம்படுத்தும் முயற்சி




சென்னை, 01 அக் 2024: இந்திய ஹெல்த்கேர் வழங்குநர்கள் சங்கம் (ஏ எச் பி ஐ) ஆனது சென்னையில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் 2வது ஏ எச் பி ஐ தலைமைத்துவ உச்சிமாநாடு 2024-ஐ வெற்றிகரமாக நடத்தியது. இந்த உச்சிமாநாடு, சுகாதாரப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்களையும், மற்ற துறைகளைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களையும் ஒன்றிணைத்தது. அதோடு, சுகாதார மேலாண்மையில் வளர்ந்து வரும் சவால்களை எதிர்கொள்ளவும், இந்தியா முழுவதும் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளவும் இந்நிகழ்வு தூண்டுதலாக இருந்தது. இந்நிகழ்வில் டாக்டர் கிரண் பேடி, புதுச்சேரியின் முன்னாள் லெப்டினன்ட் கவர்னர் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவரோடு, டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு; டாக்டர் ப்ரீத்தா ரெட்டி, அப்போலோ மருத்துவமனையின் நிர்வாக துணைத் தலைவர்; லெப்டினன்ட் ஜெனரல் டாக்டர் மாதுரி கனிட்கர், துணைவேந்தர், எம்யூஎச்எஸ் மற்றும் டாக்டர் முகமது ரேலா, தலைவர், ரேலா மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் ஆகியோர் கலந்துகொண்டனர். ஏ எச் பி ஐ தலைமைத்துவ உச்சிமாநாடு 2024 நிகழ்வில் சிறப்பு விவாதங்கள், கொள்கை சீர்திருத்தங்கள், சுகாதார உள்கட்டமைப்பில் மேம்பாடுகள் மற்றும் சுகாதார நிபுணர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு கருத்தரங்கு நடைபெற்றது. உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பில் இந்தியா முன்னணியில் இருக்கும் நிலையில், துறைசார்ந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் இத்தகைய நிகழ்வுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதோடு, ஹெல்த்கேர் பாதுகாப்பில் வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தழுவுவதற்குத் தயாராக இருப்பதும் மிக முக்கியமானது. கலந்தாலோசிக்கப்பட்டதில், சுகாதாரத் தேவைகள் மற்றும் தரமான சிகிச்சைகளுக்கான நோயாளி எதிர்பார்ப்புகள், நிதி நிலைத்தன்மை மற்றும் பயிற்சி பெற்ற மனித வளங்களின் பற்றாக்குறை மற்றும் சவாலான வேலை நிலைமைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை அடங்கும்.

ஏ எச் பி ஐ இன் இயக்குநர் ஜெனரல் டாக்டர் கிரிதர் கியானி பேசுகையில், "ஏ எச் பி ஐ தலைமைத்துவ உச்சிமாநாடு 2024 ஆனது இந்தியாவின் சுகாதாரத் துறையில் மேம்பாட்டை மேற்கொள்ளவதற்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தலைவர்களை ஒன்றிணைப்பதில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், இந்தியாவில் உள்ள அனைவருக்கும் சமமான மருத்துவ சேவையை உறுதி செய்வதற்கும் துறைகள் முழுவதுமான ஒத்துழைப்பது மிகவும் அவசியம். நமது சமூகங்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்து, இந்தியாவை ஆரோக்கியத்தில் முன்னணியில் நிலைநிறுத்தும் ஒரு நெகிழ்ச்சியான சுகாதார அமைப்பை வடிவமைக்க முடியும்." என்றார். ஏற்பாடு தலைவர்களாக டாக்டர் வெங்கட் பனிதர், மெட்வே மருத்துவமனைகள் மற்றும் டாக்டர் சந்தியா செரியன், ஃபிராண்டியர் லைஃப்லைன் மருத்துவமனை ஆகியோர் அடங்குவர். அப்பல்லோ மருத்துவமனையின் நிறுவனர் தலைவர் டாக்டர் பிரதாப் சி ரெட்டிக்கு "நூற்றாண்டின் ஹெல்த் ஐகான்" விருது வழங்கப்பட்டது, இதை அப்பல்லோ மருத்துவமனையின் நிர்வாக துணைத் தலைவர் டாக்டர் ப்ரீத்தா ரெட்டி அவரின் சார்பாகப் பெற்றார். கிஸ், கிம்ஸ் மற்றும் கிட் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் பேராசிரியர் (டாக்டர்) அச்யுதா சமந்தா "ஐகானிக் ஹெல்த்கேர் லீடர்" விருது வழங்கப்பட்டது. மேம்பட்ட செவிலியர் பயிற்சியில் அர்ப்பணிப்புடன் முன்மாதிரியான தலைவரான டாக்டர் டேவிந்தர் கவுருக்கு "செவிலியர் தலைமைத்துவத்தில் முன்மாதிரி" விருது வழங்கப்பட்டது. உலகப் புகழ்பெற்ற இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். கே.எம். செரியன், ஃபிராண்டியர் லைஃப்லைன் மருத்துவமனை மற்றும் டாக்டர் கே.எம். செரியன் ஹார்ட் ஃபவுண்டேஷன் ஆகியவற்றின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நகரம் முழுவதும் உள்ள பல்வேறு முக்கிய மருத்துவமனைகளைச் சேர்ந்த தலைமை நிர்வாக அதிகாரிகளும் இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஏ எச் பி ஐ தலைமைத்துவ உச்சிமாநாடு 2024 ஆனது "யுனிவர்சல் ஹெல்த் கவரேஜ்" மற்றும் 2047 ஆம் ஆண்டிற்குள் சுகாதாரப் பாதுகாப்பில் உலகளவில் முன்னணி இடத்தை இந்தியா எட்டுவதற்கு , பல்வேறு துறைகளில் வலுவான தலைமை மற்றும் ஒத்துழைப்பின் அவசியமானது முக்கியமானது. இந்தியாவின் சுகாதாரப் பாதுகாப்புத் துறையின் நீண்டகால வெற்றி மற்றும் நிலைத்தன்மையை உறுதி செய்வதில் புதுமை, பயனுள்ள மேலாண்மை மற்றும் தலைமைத்துவ மேம்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை தொழில்துறை தலைவர்கள் வலியுறுத்தினர்.

# இந்தியாவில் ஆடம்பர வீடுகளை வாங்க விரும்பும் என் ஆர் ஐகளுக்கான ஒரு முதன்மை நிகழ்வான ‘பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட்’-ஐ புரவங்கரா அறிவிக்கிறது




சென்னை, 01 அக் 2024: இந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றான புரவங்கரா லிமிடெட், துபாயில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு (என் ஆர் ஐகள்) தனது திட்டங்களைக் காட்சிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு நிகழ்வாக 'பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட்' ஐ அறிவித்துள்ளது. செப்டம்பர் 28, சனி மற்றும் செப்டம்பர் 29, ஞாயிறு ஆகிய நாட்களில் காலை 10:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை துபாயில் உள்ள ஷங்கிரி-லா ஹோட்டலில் இரண்டு நாட்கள் இந்த நிகழ்வு நடைபெறும்.

இந்த பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட், பெங்களூரு, சென்னை, கொச்சி, மும்பை மற்றும் புனே ஆகிய ஐந்து முக்கிய இந்திய நகரங்களில் உள்ள 20க்கும் மேற்பட்ட மதிப்புமிக்க திட்டங்களில் 4,000க்கும் மேற்பட்ட வீடுகளை ஆராய்ந்து தேர்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பை என் ஆர் ஐ களுக்கு வழங்குகிறது. இந்த நிகழ்வானது, சாத்தியமான வாங்குபவர்களுக்கு அவர்களின் முதலீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு சொத்து விருப்பங்களை வழங்குகிற சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள், உலகத் தரம் வாய்ந்த வில்லாக்கள் மற்றும் வில்லா ப்ளாட்கள் ஆகியவற்றின் பொருத்தமான ஒரு வரிசையைக் காட்சிப்படுத்துகிறது. பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட் இன் சிறப்பம்சங்கள், அனைவருக்குமான சொத்து விருப்பங்களின் ஒரு விரிவான வரிசையை உள்ளடக்கியுள்ளது. வருங்கால வாங்குபவர்கள், தோராயமாக 600 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரையிலான அளவுகள் கொண்ட 1-5 பி எச் கே அடுக்குமாடி குடியிருப்புகள், வில்லாக்கள் மற்றும் வில்லா ப்ளாட்டுகளை உள்ளடக்கிய ஒரு பலதரப்பட்ட போர்ட்ஃபோலியோவை ஆராய்ந்து தேர்வு செய்வதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

புரவங்கரா லிமிடெட் நிறுவனத்தின் குழும தலைமை நிர்வாக அதிகாரி அபிஷேக் கபூர் கூறுகையில், “கோவிட்க்குப் பின், என் ஆர் ஐகள் தங்கள் முதலீட்டின் மீதான அதிக வருவாய் தரக்கூடிய சொத்தை வாங்குவதில் ஒரு திட்டவட்டத்துடன் மிகுந்த ஆர்வம் உள்ளது. ஏப்ரல் 2023 மற்றும் பிப்ரவரி 2024 க்கு இடையில் என் ஆர் ஐ களின் வைப்புத்தொகையில் செய்யப்படும் பணம் 84.4 சதவீதம் அதிகரித்து $6.40 பில்லியனில் இருந்து $11.8 பில்லியனாக உயர்ந்துள்ளதால், இது தரவு மூலம் தெளிவாகத் தெரிகிறது. இந்த பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட் என்பது எங்கள் ‘யூ’ தத்துவத்தை அனுபவிப்பதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கிறது, இது வாடிக்கையாளரை நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் முக்கியத்துவத்துடன் வைக்கிறது. ஒவ்வொரு என் ஆர் ஐ வீடு வாங்குபவரும் இந்தியாவில் ஒரு சொந்த வீடு வாங்குவதற்கான பயணத்தில் நம்பிக்கை மற்றும் ஆதரவை உணர்வதை நாங்கள் உறுதி செய்வோம்."என்றார். பூர்வா விண்டர்மேர் (சென்னை), பூர்வா க்ளெர்மான்ட் (மும்பை) மற்றும் பூர்வா பார்க் ஹில் (பெங்களூரு) போன்ற பிரீமியம் சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள் முதல் சோமர்செட் ஹவுஸ் (சென்னை) மற்றும் ஓரியண்ட் கிராண்ட் (பெங்களூரு) போன்ற புதுமையான வேர்ல்ட் ஹோம் கலெக்ஷன் திட்டங்கள் வரை, ஒவ்வொருவரின் ரசனைக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப பொருந்தக்கூடியவைகள் அனைத்தும் உள்ளது. ஆடம்பரத்தின் உச்சத்தை விரும்புவோருக்கு, பெங்களூரில் உள்ள பூர்வா ஸ்பார்க்லிங் ஸ்பிரிங்ஸ் இல் உள்ள பிரசிடென்ஷியல் வில்லாக்கள் ஒரு ஒப்பிடமுடியாத வாழ்க்கை அனுபவத்தை வழங்குகிறன. கூடுதலாக, பூர்வா லேண்ட் பிராண்டின் வனம், ராகம் மற்றும் சௌக்கியம் போன்ற திட்டங்களில் உள்ள வில்லா ப்ளாட்டுகள், தனிப்பயன் வீடுகளை கட்ட விரும்பும் வாங்குபவர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன.

வாங்குவதில் இருந்து குடிபோகுதல் வரை ஒரு சுமூகமான நகர்வையும் அனுபவத்தையும் உறுதி செய்வதற்காக, புரவங்கரா, விரிவான விற்பனைக்கு பிந்தைய ஆதரவை வழங்குகிறது. வாங்குபவர்கள் எளிதாக நிதியளிப்பு விருப்பங்களை அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்ற கடன் வசதிக்கான உதவி இதில் அடங்குகிறது. கூடுதலாக பூர்வா ஸ்ட்ரீக்ஸ் மூலம், வாங்குபவர்கள் அவர்களின் புதிய வீடுகளை அவர்களின் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்க அனுமதிக்கின்ற தனிப்பயனாக்கப்பட்ட உள்துறை வடிவமைப்பு சேவைகளை அவர்களே பெறலாம். கூடுதலாக, இந்த நிறுவனம், குடியேறத் தயாராக உள்ள சொத்துக்களில் ஆர்வமுள்ளவர்களுக்கு வாடகை உதவி மற்றும் ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களை நிர்வகிக்க சி ஆர் எம் ஆதரவு ஆகியவற்றை வழங்குகிறது. இந்த முழுமையான ஆதரவு அமைப்பு, இந்தியாவில் முதலீடு செய்யும் என் ஆர் ஐகளுக்கு ஒரு மன அழுத்தமில்லாத அனுபவத்தை வழங்குவதில் புரவங்கரா நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

வாங்கும் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக இந்த நிகழ்விற்கான பிரத்யேக சலுகைகளையும் புரவங்கரா தேர்வு செய்துள்ளது. இந்த நிகழ்வின் போது முன்பதிவு செய்யும் வாங்குபவர்கள், நிறுவனத்தின் உட்புற வடிவமைப்புப் பிரிவான பூர்வா ஸ்ட்ரீக்ஸ் வழங்கும் ரூ. 1 லட்சம் முதல் ரூ. 10 லட்சம் வரையிலான வவுச்சர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

காட்சிப்படுத்தப்பட்ட 4,000க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் பிரத்யேக பலன்களுடன், இந்த பூர்வா என் ஆர் ஐ ஹோம் ஃபெஸ்ட், இந்தியாவின் மிகச்சிறந்த ரியல் எஸ்டேட் வழங்கல்களில் முதலீடு செய்ய விரும்பும் என் ஆர் ஐக்கள் ஒரு கட்டாயம் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்வாகும்.

# “கேப்டனின் குரல் தான் எனக்கு சோறு போட்டது” ; திருமதி பிரேமலதா விஜயகாந்திடம் நெகிழ்ந்த நடிகர் டிஎஸ்கே



சென்னை, 01 அக் 2024: கலக்கப்போவது யாரு உள்ளிட்ட பல சின்னத்திரை ரியாலிட்டி ஷோக்களில் சாம்பியன் பட்டம் வென்று தனது நகைச்சுவை நடிப்பால் பிரபலமானவர் நடிகர் டிஎஸ்கே. இதனைத் தொடர்ந்து ‘பெட்ரோமாக்ஸ்’ என்கிற படத்தின் மூலம் சினிமாவிலும் ஒரு நகைச்சுவை நடிகராக நுழைந்து கவனம் ஈர்த்தார். இந்த நிலையில் சமீபத்தில் இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண், அட்டகத்தி தினேஷ் நடிப்பில் வெளியான ‘லப்பர் பந்து’ படத்தில் மிக முக்கியமான கதாபாத்திரம் ஒன்றில் நடித்துள்ள டிஎஸ்கே, இதுவரை தனது பாணியாக இருந்த நகைச்சுவை நடிப்பிலிருந்து விலகி சற்று வில்லத்தனம் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவரது நடிப்பிற்கு ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பும் கிடைத்துள்ளது.

அது மட்டுமல்ல இந்த படத்தில் நடிகர் அட்டகத்தி தினேஷ், விஜயகாந்த் ரசிகராக நடித்திருக்கிறார் என்பதால் படம் முழுவதிலும் விஜயகாந்தின் புகைப்படங்கள், போஸ்டர்கள் இடம்பெற்றுள்ளது மற்றும் கிரிக்கெட் மைதானங்களில் கேப்டன் விஜயகாந்தின் புகழ்பெற்ற பாடல்கள் ஒலிப்பது என புரட்சி கலைஞரின் புகழ் பாடும் படமாக இது அமைந்து விட்டது. இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து இன்று மறைந்த புரட்சி கலைஞர் கேப்டன் விஜயகாந்தின் நினைவிடத்திற்கு சென்ற நடிகர் டிஎஸ்கே அங்கே அவருக்கு தனது அஞ்சலியை செலுத்தினார். மேலும் விஜயகாந்தின் மனைவி திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களையும் நேரில் சந்தித்தார் டிஎஸ்கே. அப்போது ‘லப்பர் பந்து’ படத்தை தான் பார்த்ததாகவும் கேப்டனை பெருமைப்படுத்தும் விதமாக அந்த படத்தில் பல காட்சிகளை அமைத்திருந்ததாகவும் கூறிய பிரேமலதா விஜயகாந்த், படத்தில் டிஎஸ்கேவின் வில்லத்தனம் கலந்த நடிப்பு நன்றாக இருந்தது என்றும் இதேபோன்று பல நல்ல கதாபாத்திரங்களை ஏற்று திரை உலகில் மேலும் முன்னேற வேண்டும் என்றும் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அப்போது டிஎஸ்கே கேப்டன் விஜயகாந்த் குறித்து பிரேமலதாவிடம் நினைவுகூறும்போது. “நான் சின்னத்திரையில் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் குரலை மிமிக்ரி செய்து அதன் மூலமாக வாய்ப்பு பெற்று தான் இந்த அளவிற்கு உயர்ந்தேன். அவருடைய குரல் தான் எனக்கு சோறு போட்டது. இன்று அவரை பெருமைப்படுத்தும் விதமாக உருவாகியுள்ள படத்தில் நானும் ஒரு அங்கமாக இடம் பெற்றதன் மூலம் மீண்டும் எனக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் கிடைத்து வருகின்றன. இதுவும் அவரது ஆசீர்வாதம் தான்.

என் தந்தை இறந்துவிட்டாலும் அவர் ஏதோ வேறு ஒரு இடத்தில் உயிருடன் வாழ்ந்து வருகிறார் என்கிற நினைப்பில் தான் இருந்து வருகிறேன். அதேபோலதான் கேப்டன் விஜயகாந்த்தும் நம்மை விட்டு மறையவில்லை. எங்கோ ஒரு இடத்தில் இருந்து நம்மை எல்லாம் கவனித்து ஆசீர்வதித்து வருகிறார் என்று நான் நினைத்துக் கொள்கிறேன்” என நெகிழ்ச்சியுடன் விஜயகாந்த் குறித்த தனது நினைவுகளை பிரேமலதா விஜயகாந்த்திடம் பகிர்ந்து கொண்டுள்ளார் நடிகர் டிஎஸ்கே.

# சி எல் ஈ எஃப் இசை விருதுகள் 2024 - ஆறு விருதுகளை வென்ற ரயில் திரைப்படத்தின் இசையமைப்பாளர், பன்முக இசைக்கலைஞர் எஸ்.ஜே. ஜனனி




சென்னை, 01 அக் 2024: சமீபத்தில் வெளியான ரெயில் திரைப்படத்தின் இசையமைப்பாளர் எஸ்.ஜெ. ஜனனி, ரெயில் திரைப்பட பாடல்களுக்காக 4 பிரிவுகளில் 4 சி எல் ஈ எஃப் இசை விருதுகள் மற்றும் மும்பை 2024 மற்றும் பக்திப் பிரிவுகளுக்கான 2 விருதுகளை வென்றுள்ளார். இந்த திரைப்படத்தை டிஸ்கவரி சினிமாஸ் திரு . வேடியப்பன் தயாரித்தார் மற்றும் திரு. பாஸ்கர் சக்தி இயக்கியுள்ளார். விருது விவரங்கள்

ரேடியோ & மியூசிக் 5 சி எல் ஈ எஃப் இசை விருதுகள் 2024-இன் 4வது பதிப்பு, செப்டம்பர் 27, 2024 அன்று லீலா ஹோட்டல், இன்டர்நேஷனல் ஏர்போர்ட், மும்பையில் நடைபெற்றது. இந்திய சினிமா பிரிவில் எஸ்.ஜே.ஜனனிக்கு ரெயில் திரைப்படத்திற்காக 4 விருதுகள் வழங்கப்பட்டன: சிறந்த இசையமைப்பாளர் - பூ பூக்குது ("ரயில்" பாடலுக்காக),

சிறந்த பெண் பின்னணிப் பாடகி, ஏலே செவத்தவனே... ("ரயில்" படத்தில் இருந்து), சிறந்த திரைப்படப் பாடல் - தமிழ் - பூ பூக்குது ("ரயில்" பாடலுக்காக),& எது உன் இடம் ("ரயில்" என்ற பாடலுக்காக சிறந்த இசை கோர்ப்பாளர் மற்றும் ப்ரோகிராமர்).

இத்துடன், ஜனனியின் "சிவனே சிவனே ஓம்" பிரம்மகுமாரிகளின் பாடல், 2024 ஆம் ஆண்டுக்கான 2 சி எல் ஈ எஃப் இசை விருதுகளை வென்றது:

பக்தி - சிறந்த இசையமைப்பாளர் & பக்தி - சிறந்த பாடல்/ஆல்பம் தமிழ், "இந்திய தேசிய விருது", தமிழக அரசின் "கலை மாமணி விருது" & பல உலகளாவிய விருதுகள் பெற்ற எஸ்.ஜே. ஜனனி, அமெரிக்காவின் அட்லாண்டாவில் உள்ள சர்வதேச பாடகர்-பாடலாசிரியர்கள் சங்கத்தின் 2024 ஆகஸ்ட் ஆண்டின் சர்வதேச பெண் பாடகருக்கான ஐ எஸ் எஸ் ஏ விருதை வென்றுள்ளார். இவர் கிராமி வாக்களிக்கும் உறுப்பினர் என்பது குறிப்பிடத் தக்கது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## இந்தியாவில் 2024 ஆம் ஆண்டிற்கான 45% பெண் கேடட்களின் நியமனத்தை அடைகிறதன் மூலம் மேர்ஸ்க் அதன் 'ஈக்வல் அட் சீ' 2027 இலக்கை நெருங்குகிறது




சென்னை, 01 அக் 2024: லாஜிஸ்டிக்ஸ் இன் ஒரு உலகளாவிய ஒருங்கிணைப்பாளரான ஏ.பி. மோல்லர் - மேர்ஸ்க் (மேர்ஸ்க்), இந்தியாவில் அதன் 'ஈக்வல் அட் சீ' முயற்சியின் கீழ் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை இன்று அறிவித்தது. 2024 ஆம் ஆண்டில் பணியமர்த்தப்பட்ட நாட்டிகல் மற்றும் இன்ஜினியரிங் கேடட்களில் 45% பெண்களாக இருப்பதன் மூலம், இந்த நிறுவனம் அதன் கேடட் நியமனத்தில் சமமான பாலின பிரதிநிதித்துவம் என்ற 2027 ஆம் ஆண்டிற்கான இலக்கை நெருங்கியுள்ளது.

இந்திய கடல்சார் துறையில் பாலின சமத்துவத்தை நோக்கிய முன்னேற்றத்தை துரிதப்படுத்துதல் 2022 இல் தொடங்கப்பட்ட இந்த 'ஈக்வல் அட் சீ' முன்முயற்சி இந்தியாவில் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் அதன் மூன்றாவது ஆண்டில் நுழைகிறது. மேர்ஸ்க் இன் மாலுமிகளிடையே பாலின சமத்துவத்தை அடைவது, மாலுமிகளிடையே உள்ள பெண்களின் வரலாற்றுக் குறைவான பிரதிநிதித்துவத்தை நிவர்த்தி செய்வது மற்றும் பாலின பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்காக முழு இந்திய கடல்சார் துறைக்கும் ஒரு சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவது ஆகியவை இந்த திட்டத்தின் முதன்மை நோக்கமாகும். இந்தத் திட்டம் தொழில்துறை முழுவதிலும் உள்ள பல்வேறு பங்குதாரர்களை ஒரு பொதுவான தளத்தில் கொண்டு வருகிறது, இது யோசனைகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், தொழில்துறை சவால்களைப் புரிந்துகொள்வதற்கும், ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்வதற்கும், சிறந்த நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கும் ஒரு மையமாக செயல்படுகிறது.

இந்தியாவுக்கான டென்மார்க்கின் தூதுவரான மேதகு ஃப்ரெடி ஸ்வேன், "கடல்களுக்கு பாலினம் தெரியாது. கடல்சார் தொழில்களில் பன்முகத்தன்மையை வென்றெடுப்பதன் மூலம், மேர்ஸ்க் நிறுவனம் சமத்துவத்தை நோக்கிச் செல்வது மட்டுமல்லாமல், கப்பல் தொழில்துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான வழியையும் திட்டமிடுகிறது. கடல்சார் நாடுகளான டென்மார்க்கும் இந்தியாவும் இந்த மாற்றத்தின் போக்கை வழிநடத்த வேண்டும்." அவர் மேலும் கூறினார், "பெண்களுக்கு கடல்சார் தொழிலில் அதிக வாய்ப்புகளை உருவாக்குவதற்கான இந்த தொழில்துறை அளவிலான முயற்சி சந்தேகத்திற்கு இடமின்றி நமது உலகளாவிய கப்பல் சமூகத்தை வலுப்படுத்தும் மற்றும் வரும் ஆண்டுகளில் முன்னேற்றம் மற்றும் நிலைத்தன்மையை உந்தும்."

மேர்ஸ்க் நிறுவனத்தின் ஆசியா ஹெட் ஆஃப் மரைன் பீப்பிள் கரண் கோச்சார் கூறுகையில், "எங்கள் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் தொழில்துறையின் அபரிமிதமான ஆதரவு ஆகியவை பெண்கள் செழிக்க உதவுவதற்கு கடலில் ஒரு சமமான சூழலை உருவாக்குவதற்கான எதிர்காலத்தை உணரத் தொடங்கியுள்ளன. எங்களது முன்முயற்சிகள் மூலம், இந்தியாவில் அதிகமான பெண்களை, கடல்வழிப் பயணத்தை ஒரு தொழிலாகத் தேர்ந்தெடுக்க வெற்றிகரமாக ஊக்கப்படுத்தியுள்ளோம்."என்றார். அவர், "45% ஐ அடைவது என்பது மேர்ஸ்க் நிறுவனத்திற்குள் மற்றும் தொழில்துறை முழுவதும் ஒரு மிகப்பெரிய குழு முயற்சியாகும். இப்போது வேகத்தை மேல்நோக்கி தக்கவைத்து, பணியமர்த்தப்பட்ட பெண்களும் கடற்படையில் தக்கவைக்கப்படுவதை உறுதிசெய்ய பாடுபட வேண்டிய நேரம் இதுவாக இருக்கிறது." என்று மேலும் கூறினார்.

மும்பையில் இன்று நடைபெற்ற இந்த 'ஈக்வல் அட் சீ' மாநாடு, பாலின வேறுபாடு மற்றும் உள்ளடக்கம் குறித்து விவாதிக்க கடல்சார் தொழில் தலைவர்களை ஒன்றிணைத்தது. இந்நிகழ்ச்சியில் இந்தியாவுக்கான டேனிஷ் தூதர் மேதகு ஃப்ரெடி ஸ்வேன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மாநாடு, ஒரு ஊடாடும் விவாதத்தின் மூலம் பணியிட கலாச்சாரம் மற்றும் துன்புறுத்தலை ஆராய்ந்த ' நிலையான சமத்துவம்: ஆன்-போர்டிங்கிற்கு அப்பால் செல்வது

ஆண் ஆதிக்கம் செலுத்தும் துறைகளில் முன்னோடி பெண்களை கௌரவித்த 'கடல் பக்க அரட்டை - அனைத்து கூரைகளும் கண்ணாடியால் செய்யப்பட்டவை அல்ல

மேலும், 'போர்டில் உள்ள அனைத்து பெண்களும்: கட்டுக்கதையா அல்லது உண்மையா?

என்ற தலைப்பில் ஆழமான விவாதம் ஆகிய மூன்று முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியது. வுமன் இன் மெரிடைம் அசோசியேஷன் (டபிள்யூ ஐ எம் ஏ)

வழங்கிய ஒரு அமர்வு மற்றும் ஈக்வல் அட் சீ சவாலின் வெற்றியாளர் அறிவிப்பு ஆகியவை உள்ளடங்கிய மேலும் இரண்டு சிறப்பம்சங்கள் ஆகும். ஒரு உள்ளடக்கிய கடல்சார் தொழில்துறையை வளர்ப்பதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்ற மேர்ஸ்க் நிறுவனத்தின் பன்முகத்தன்மை முன்முயற்சிகள் குறித்த ஒரு முன்னேற்ற அறிக்கையுடன் இந்நிகழ்வு நிறைவடைந்தது.

இந்தியாவில் முக்கிய சாதனைகள் மற்றும் மைல்கற்கள்

1. இந்தியப் பெண் மாலுமிகள்: சமீபத்திய கேடட் சேர்ப்புகள் மூலம், இந்தியாவில் உள்ள மேர்ஸ்க் நிறுவனத்தின் மாலுமி பணியாளர்களினுள் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்ற வகையில், இந்தியப் பெண் மாலுமிகளின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டில் வெறும் 41 இல் இருந்து தற்போது 350 ஐத் தாண்டியுள்ளது.

2. நாட்டிகல் மற்றும் இன்ஜினியரிங் பிரிவுகளில் முன்னேற்றம்:

இந்த ஆண்டின் நியமனங்களில் பெண் கேடட்களின் ஒட்டுமொத்த சதவீதம் 45% வரை உயர்ந்துள்ளது, மேலும் நாட்டிகல் பிரிவு ஏற்கனவே 50% ஐ தாண்டியுள்ளது.

3. பெண்கள் மதிப்பீட்டுத் திட்டம்: 2023 ஆம் ஆண்டில் 'ஈக்வல் அட் சீ' திட்டத்தின் துணைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இந்த முயற்சி இந்தியாவில் 22 பெண் பயிற்சியாளர்களுடன் தொடங்கப்பட்டது. அதன் வெற்றியை விரிவாக்குகின்ற வகையில், மேர்ஸ்க் இரண்டு அடுத்தடுத்த கூடுதல் பயிற்சியாளர் தொகுப்புகளைச் சேர்த்தது, தற்போது பயிற்சி பெறுகின்ற ஒரு மொத்த 70 பெண்கள் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.

உலகளாவிய தாக்கம்

இந்தியாவில் 'ஈக்வல் அட் சீ' முயற்சியின் இந்த வெற்றி, பாலின பன்முகத்தன்மையை மேம்படுத்துவதில் மேர்ஸ்க் நிறுவனத்தின் உலகளாவிய முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் மேர்ஸ்க் கப்பல் தொகுப்பில் 295 ஆக இருந்த பெண் மாலுமிகள் எண்ணிக்கை 2024 இல் இருமடங்குக்கும் அதிகமாக 650 க்கு மேல் அதிகரித்துள்ளது. மேர்ஸ்க் நிறுவனத்தின் உலகளாவிய மாலுமி குழுவில் பெண்களின் சதவீதம் 2022 இல் 2.3% ஆக இருந்து 2024 இல் 5.5% ஆக உயர்ந்துள்ளது.

முன்னோக்கிய இலக்கு இந்தியாவில் மாலுமிகளிடையே பாலின பன்முகத்தன்மை இலக்குகளை மேம்படுத்துவதற்கான அதன் வெற்றிகரமான பயணத்தை மேர்ஸ்க் கொண்டாடும்போது, இந்த நிறுவனம் ஒரு உள்ளடக்கிய சூழலை வளர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது மேலும் கடல்சார் துறையில் தடைகளை உடைப்பதற்கும் தொடருகின்றது. இந்த வேகத்தை கேடட்களின் பயிற்சி முதல் ஆட்சேர்ப்பு வரை முன்னோக்கி கொண்டு செல்வதையும், பாரம்பரியமாக ஆண் ஆதிக்கம் செலுத்தும் இந்தத் துறையில் பெண்கள் முன்னேற அனுமதிக்கும் சூழலை உருவாக்குவதையும் மேர்ஸ்க் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஸ்விகி லிமிடெட் செபியிடம் யூடிஆர்எச்பி-1ஐ தாக்கல் செய்கிறது

சென்னை, 01 அக் 2024: உணவு ("உணவு டெலிவரி"), மளிகை மற்றும் வீட்டுப் பொருட்கள் ("இன்ஸ்டாமார்ட்") ஆகியவற்றை ஆராயவும், தேர்ந்தெடுக்கவும், ஆர்டர் செய்யவும் மற்றும் பணம் செலுத்தவும் , மற்றும் அவர்களின் ஆர்டர்களை அதன் தேவைக்கேற்ப டெலிவரி பார்ட்னர் நெட்வொர்க் மூலம் அவர்களின் வீட்டு வாசலில் டெலிவரி செய்யவும் ஒரு ஒருங்கிணைந்த பயன்பாட்டின் மூலம், அணுகக்கூடிய பயனர்களுக்கு பயன்படுத்த எளிதான வசதியான தளத்தை வழங்குகின்ற, புதுயுக, வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட தொழில்நுட்ப நிறுவனமான ஸ்விகி லிமிடெட், அதன் ஐபிஓக்கான யூடிஆர்எச்பி-1 ஐ செபி நிறுவனத்திடம் தாக்கல் செய்தது.


இந்தப் பொது வழங்கலானது, ரூ. 3,750 கோடி வரையிலான ஒரு புதிய வெளியீடு மற்றும் ஒரு சம பங்குக்கு ரூ. 1 முகமதிப்பு கொண்ட 185,286,265 பங்குகள் வரையிலான விற்பனைக்கான வழங்கல் ஆகியவற்றின் ஒரு புதிய வெளியீட்டைக் கொண்டுள்ளது. தேவையான பெறப்பட்ட ஒப்புதல்களுக்கு (ஏதேனும் இருந்தால்) உட்பட்டு, அதன் விருப்பப்படி, ஆர் ஓ சி உடன் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸைத் தாக்கல் செய்வதற்கு முன், ரூ. 750 கோடி வரை ரொக்கப் பரிசீலனைக்கான ஒரு தனிப்பட்ட முதலீடு அல்லது பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் பிற வழி உட்பட, பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்க, நிறுவனம் மற்றும் விற்பனை செய்யும் பங்குதாரர்கள், பிஆர்எல்எம்களுடன் கலந்தாலோசித்து, குறிப்பிட்ட பத்திரங்களின் ஒரு வெளியீட்டைக் கருத்தில் கொள்ளலாம் ("ப்ரீ-ஐபிஓ ப்ளேஸ்மெண்ட்"). முன்-ஆரம்பப் பொது வழங்கல் மேற்கொள்ளப்பட்டால், எஸ் சி ஆர் ஆர் விதி 19(2)(பி) உடன் இணங்கும் வழங்கலுக்கு உட்பட்டு, அத்தகைய முன்-ஆரம்பப் பொது வழங்கல் முதலீட்டின் அளவிற்கு புதிய வெளியீடு அளவு குறைக்கப்படும்.

ஸ்விகி என்பது உணவு ("உணவு டெலிவரி"), மளிகை மற்றும் வீட்டுப் பொருட்கள் ("இன்ஸ்டாமார்ட்") ஆகியவற்றை ஆராயவும், தேர்ந்தெடுக்கவும், ஆர்டர் செய்யவும் மற்றும் பணம் செலுத்தவும், மற்றும் அவர்களின் ஆர்டர்களை அதன் தேவைக்கேற்ப டெலிவரி பார்ட்னர் நெட்வொர்க் மூலம் அவர்களின் வீட்டு வாசலில் டெலிவரி செய்யவும் பயனர்களுக்கு பயன்படுத்த எளிதான வசதியான தளத்தை வழங்குகின்ற ஒரு நுகர்வோர் மையப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமாகும். உணவக முன்பதிவு (டைன்அவுட்) மற்றும் நிகழ்வுகள் முன்பதிவுகளை செய்வதற்கும் (ஸ்டெப்இன்அவுட்), தயாரிப்பு பிக்-அப்/டிராப்-ஆஃப் சேவைகளை (ஜீனி) பெறுவதற்கும் மற்றும் பிற ஹைப்பர்லோகல் வர்த்தகத்தின் (மற்றவைகளுடன் ஸ்விகி மினிஸ், ) செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கும் இந்த தளத்தைப் பயன்படுத்தலாம்.

பின்வருவனவற்றிற்கு நிதியளிக்க நிகர வருவாயைப் பயன்படுத்த நிறுவனம் உத்தேசித்துள்ளது: (1) மெட்டீரியல் துணை நிறுவனமான ஸ்கூட்சி இல் முதலீடு, முழு அல்லது பகுதியளவு திருப்பிச் செலுத்துதல் அல்லது சில அல்லது அனைத்து கடன்களை முன்கூட்டியே செலுத்துதல்; (2) பின்வரும் நோக்கங்களுக்காக மெட்டீரியல் துணை நிறுவனமான ஸ்கூட்சி இல் முதலீடு : (அ) டார்க் ஸ்டோர்களைத் திறப்பதன் மூலம் விரைவு வணிகப் பிரிவுக்கான டார்க் ஸ்டோர் நெட்வொர்க்கை விரிவுபடுத்துதல்; மற்றும் (ஆ) டார்க் ஸ்டோர்களுக்கு குத்தகை அல்லது உரிமக் கட்டணம் செலுத்துதல்; (3) தொழில்நுட்பம் மற்றும் கிளவுட் உள்கட்டமைப்பில் முதலீடு செய்தல்; (4) பிராண்ட் விழிப்புணர்வு மற்றும் தளத்தின் தெரிவுநிலையை, பிரிவுகள் முழுவதும் மேம்படுத்துவதற்காக பிராண்ட் மார்க்கெட்டிங் மற்றும் பிசினஸ் மேம்பாட்டுடன் தொடர்புடைய செலவுகள்; மற்றும் (5) அடையாளம் காணப்படாத கையகப்படுத்துதல்கள் மூலம் கனிம வளர்ச்சிக்கு நிதியளித்தல் மற்றும் பொது நிறுவன நோக்கங்கள்.

கோடக் மஹிந்திரா கேபிடல் கம்பெனி லிமிடெட், ஜே.பி. மோர்கன் இந்தியா பிரைவேட் லிமிடெட், சிட்டி குரூப் குளோபல் மார்க்கெட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், போஃபா செக்யூரிட்டீஸ் இந்தியா லிமிடெட், ஜெஃப்ரீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஐ சி ஐ சி ஐ செக்யூரிட்டீஸ் லிமிடெட் மற்றும் அவெண்டஸ் கேபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்த வெளியீட்டின் புக் ரன்னிங் லீட் மேலாளர்களாக உள்ளன.

## குற்றப்பரம்பரை அரசியலை மையமாகக் கொண்ட கபிலன்வைரமுத்துவின் மாக்கியவெல்லி காப்பியம் வெளியானது, இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டார்




சென்னை, 01 அக் 2024: எழுத்தாளரும் பாடலாசிரியருமான கபிலன் வைரமுத்து எழுதிய மாக்கியவெல்லி காப்பியம் என்ற நாவலை இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டார். இது 2022 ஆம் வெளியான ஆகோள் என்ற நாவலின் இரண்டாம் பாகம். பிரிட்டிஷ் இந்தியாவின் குற்றப் பரம்பரை சட்டத்தையும் அதன் நவீன பரிணாமங்களையும் விவாதிக்கும் முறையில் கபிலன் வைரமுத்து இரண்டு நாவல்களையும் எழுதியிருக்கிறார். முதல் பாகத்தில் பன்னிரண்டு வயது சிறுவனாக இருந்த மாக்கியவெல்லி இரண்டாம் பாகத்தின் மைய கதாபாத்திரமாக வருகிறான். மதுரை மாவட்டத்துக்குட்பட்ட எட்டு நாடுகள் என்ற பகுதியில் கதை நிகழ்வதாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. 1801 தொடங்கி 2057 வரையிலான காலக்கட்டத்தின் கதையாக இது எழுதப்பட்டிருக்கிறது. பல வரலாற்று தகவல்கள் மற்றும் அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவை குறித்த இரண்டு ஆண்டுகள் கள ஆய்வுக்கு பின் கபிலன்வைரமுத்து இந்த நாவலை எழுதியிருப்பதாக பதிப்பாளர் வேடியப்பன் குறிப்பிட்டிருக்கிறார். இஸ்ரேல் அரசு இணையவெளியில் மேற்கொண்ட முக்கியமான முன்னெடுப்புதான் இந்த இரண்டாம் பாகத்திற்கான முதல் பொறி என்று கபிலன்வைரமுத்து தன் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். நாவலுக்கென்று பிரத்யேகமாக மூல் என்ற கணினி மொழி உருவாக்கப்பட்டிருக்கிறது. மாக்கியவெல்லி காப்பியம் நூலை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் வருகிற அக்டோபர் 06ஆம் தேதி சென்னை டிஸ்கவரி புக் பேலஸ் வளாகத்தில் ஆசிரியர் சந்திப்பு நடைபெறவிருக்கிறது. மாக்கியவெல்லி காப்பியம் கபிலன்வைரமுத்துவின் பன்னிரண்டாவது நூல். ஐந்தாவது நாவல். ஆகோள் முதல் பாகம் ஆங்கிலத்திலும் வெளி வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com RNI No. - TNTAM24840
உள்ளது உள்ளபடி

செவ்வாய், அக்டோபர் 01, 2024

## தேவ் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஐஎஃப்எஸ்சி ஒற்றைச் சாளர அமைப்பை மாண்புமிகு பிரதமர் தொடங்கி வைத்தார்

சென்னை, 01 அக் 2024: கிளவுட் சேவைகள், டிஜிட்டல் உருமாற்றம், பெருநிறுவன செயல்பாடுகள் மற்றும் மேலாண்மையின் கீழ் ஐடி சேவைகள் ஆகியவற்றை வழங்கிவரும் உலகளாவிய தகவல்தொழில்நுட்ப சேவைகள் நிறுவனமான தேவ் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி லிமிடெட், ஒற்றை சாளர ஐடி அமைப்பை (எஸ் டபிள்யூ ஐ டி) உருவாக்கியிருப்பதன் மூலம் அதன் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வலுவாக எண்பித்திருக்கிறது. இந்தியாவின் இண்டர்நேஷனல் ஃபைனான்சியல் சர்வீசஸ் சென்டர்களுக்குள் (ஐ எஃப் எஸ் சிஸ்) தங்கள் இயக்க செயல்பாடுகளை பிசினஸ் நிறுவனங்கள் நிறுவுவதை புரட்சிகரமாக மாற்றுவதற்கென வடிவமைக்கப்பட்டிருக்கும் இச்செயல்தளம், அகமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பாரதப் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது. இன்டர்நேஷனல் ஃபைனான்சியல் சர்வீசஸ் சென்டர்ஸ் அத்தாரிட்டியின் (ஐ எஃப் எஸ் சிஏ), வழிகாட்டலின் கீழ், உருவாக்கப்பட்டிருக்கும் எஸ் டபிள்யூ ஐ டி, இந்த சிறப்பு நிதிசார் மண்டலங்களில் இயக்க செயல்பாடுகளை நிறுவ விழையும் நிறுவனங்களுக்கு சிரமமற்ற மற்றும் திறன்மிக்க அனுபவத்தை வழங்குவதற்கான ஒரு மிக நவீன ஆன்லைன் செயல்தளமாகும். அதிகார நிர்வாக செயல்முறைகளை இத்தளம் எளிதாக்குகிறது, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகிறது; இதன் வழியாக நிறுவனங்களுக்கு அதிவேகமான மற்றும் மிக திறன்மிக்க செயல்முறைகளை ஏதுவாக்குகிறது. ஐ எஃப் எஸ் சி - க்குள் இயக்க செயல்பாடுகளை தொடங்குவதற்கு தேவைப்படும் நேரம் மற்றும் முயற்சியை கணிசமாக குறைப்பதன் வழியாக, உலகளாவிய நிதிசார் புவிமையமாக இந்தியாவின் ஈர்ப்பை இப்புத்தாக்கம் பெரிதும் மேம்படுத்துகிறது. அகமதாபாத் நகரில், 2024 செப்டம்பர் 16 அன்று நடைபெற்ற நிகழ்வில் இந்த செயல்தளத்தை மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார். எஸ் டபிள்யூ ஐ டி - ன் வெற்றிகரமான உருவாக்கம், மிக நவீன டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதில் தேவ் ஐடி - ன் திறனை வெளிப்படுத்துகிறது. டிஜிட்டல் உருமாற்ற நடவடிக்கையில் இந்நிறுவனத்தின் தலைமைத்துவத்தை இச்சாதனை வலுப்படுத்துகிறது. அத்துடன், சுகாதார பராமரிப்பு, மின் - ஆளுகை மற்றும் ரிடெய்ல் போன்ற பல்வேறு துறைகளில் அதிக தாக்கம் ஏற்படுத்தும் செயல்திட்டங்களுக்கான கதவுகளையும் திறந்து வைக்கிறது, இத்துறைகளில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட இந்த அமைப்புகள், இயக்க ரீதியான திறனை பெரிதும் மேம்படுத்தும். தேசிய அளவில் இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தை செயலாக்கம் செய்திருப்பதன் வழியாக, மிக முக்கியமான தகவல்தொழில்நுட்ப தீர்வுகளுக்கு ஒரு நம்பகமான பார்ட்னராக அதன் நற்பெயரையும் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. இச்செயல்தளத்தின் வெற்றியானது, வாடிக்கையாளரை மையமாக கொண்ட இந்நிறுவனத்தின் அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது; இதன் மூலம் பிரத்யேகமாக வடிவமைக்கப்படுகின்ற டிஜிட்டல் நிலைமாற்றத் தீர்வுகளை தேடுகின்ற பிசினஸ் நிறுவனங்களுக்கு இச்சேவைகளை வழங்கும் முதன்மை நிறுவனமாக தன்னை தேவ் ஐடி நிலைநாட்டியிருக்கிறது. இனிவரும் காலங்களில், இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப சேவைகள் துறை, அதன் விரிவாக்கப் பணியை தொடரும் என்பதால், தேவ் ஐடி - க்கு எஸ் டபிள்யூ ஐ டி ஒரு வளர்ச்சியை வேகமாக முன்னெடுத்துச் செல்லும் ஊக்கியாக இருக்கும். தனது அனுபவம், புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் மதிப்பை வழங்குவதில் கூர்நோக்கம் ஆகியவற்றின் காரணமாக, புதிய வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தவும் மற்றும் உலகளாவிய ஐடி சேவைகள் வாழ்வில் தனது தலைமைத்துவத்தை மேலும் வலுவாக்கவும் தேவ் ஐடி தயார்நிலையில் இருக்கிறது.

## சென்னை சர்வதேச திரைப்பட விழா, ரஷ்ய சினிமாவின் பாரம்பரியம் மிக்க எம் ஓ எஸ் பிலிம் ஸ்டுடியோவின் 100-வது ஆண்டு விழாவை வெற்றிகரமாக கொண்டாடியது




சென்னை, 01 அக் 2024: சென்னை சர்வதேச திரைப்பட விழா, ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மையத்துடன் இணைந்து, ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஏ.வி.எம் ஆடிட்டோரியத்தில் எம் ஓ எஸ் பிலிம் 100- வது ஆண்டு விழாவினை பிரமாண்டமாக நடத்தியது. இந்த நிகழ்வு, ரஷ்யாவின் மிகச் சிறந்த திரைப்பட ஸ்டுடியோக்களில் ஒன்றான எம் ஓ எஸ் பிலிம்-ன் வளமான பாரம்பரியத்தை கௌரவிப்பதோடு,

3 நாள் சினிமா கொண்டாட்டத்தின் துவக்கமாகவும் அமைந்திருந்தது.

சென்னையில் உள்ள ரஷ்ய கூட்டமைப்பின் துணைத் தூதரகத் தலைவர் மேதகு. வலேரி கோட்சேவ் மற்றும் சென்னையில் உள்ள ரஷ்ய மாளிகையின் துணைத் தூதரும் இயக்குநருமான திரு. அலெக்சாண்டர் டோடோனோவ் ஆகியோர் இந்த தொடக்க விழாவில் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர் இருவருமே இருநாட்டு கலாச்சார ஒத்துழைப்பிற்கு தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

மேலும், உலகளாவிய திரைப்படத் துறையில் ரஷ்ய சினிமாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

ரெண்ட் எ ஹவுஸ் வித் ஆல் தி இன்கன்வீனியன்ஸஸ் (2016) என்ற நகைச்சுவை திரைப்படத்துடன் துவங்கியது, இந்த நகைச்சுவை கதை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது, அதைத் தொடர்ந்து அன்னா கரேனினா: வ்ரோன்ஸ்கியின் கதை (2017), இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படும் காவிய காதலான இப்படம் பார்வையாளர்களை வியத்தகு மறுபரிசீலனைக்கு அழைத்துச் சென்றது. ரஷ்ய சினிமாவின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை ஆராய்வதற்கான அரிய வாய்ப்பை பார்வையாளர்களுக்கு இந்நிகழ்வு வழங்கியது.

மாஸ்ஃபில்மின் சில குறிப்பிடத்தக்க திரைப்படங்களை திருவிழாவில் திரையிட உள்ளோம். திரையிடல்கள், ஆங்கில வசனங்களை உள்ளடக்கியவை என்பது குறிப்படத்தகுந்தது.

சென்னையின் திரைப்பட ஆர்வலர்கள் சர்வதேச திரைப்படங்களைப் பாராட்ட ஒரு தனித்துவமான வாய்ப்பை இந்நிகழ்வு வழங்குகிறது.

மாஸ்ஃபில்ம் 100 வது கொண்டாட்ட விழா செப்டம்பர் 29 ஆம் தேதி வரை ஏ.வி.எம் ஆடிட்டோரியத்தில் நடைபெற உள்ளது.

தி வானிஷ்ட் எம்பயர் (2007), தி ஸ்டார் (2002), வார்டு எண் 6 (2009), மற்றும் டிசிஷன்: லிக்விடேஷன் (2018) போன்ற படங்களை திரையிட உள்ளது.

சென்னை சர்வதேச திரைப்பட விழா மற்றும் ரஷ்ய அறிவியல் மற்றும் கலாச்சார மையம் ஆகியவற்றின் இந்த முயற்சி மாபெரும் வெற்றி அடைந்துள்ளது. இந்நிகழ்வு ரஷ்யாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான கலாச்சார பரிமாற்றத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

## மும்பை பங்குச்சந்தை (பி எஸ் ஈ) ஸ்மால்கேப் இன்டெக்ஸ் - ல் சேர்க்கப்பட்டிருக்கும் மெர்க்குரி இவி டெக் லிமிடெட்

சென்னை, 01 அக் 2024: மின்சார வாகனங்களின் விரிவான தொகுப்பை தயாரிக்கும் தொழில்பிரிவில் முன்னணி நிறுவனமாக இயங்கி வரும் மெர்க்குரி இவி டெக் லிமிடெட், மும்பை பங்குச்சந்தை (பி எஸ் ஈ) ஸ்மால்கேப் இன்டெக்ஸ் - ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்தொழில்துறைக்குள் சிறப்பான வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் மீது இந்நிறுவனம் கொண்டிருக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த மைல்கல் நிகழ்வு பிரதிபலிக்கிறது. பிஎஸ்இ ஸ்மால்கேப் இன்டெக்ஸ் - ன் ஒரு பகுதியாக இடம்பெற்றுள்ள மெர்க்குரி இவி டெக் லிமிடெட், அதன் வளர்ச்சி பயணத்தை மேலும் விரைவுபடுத்தி மேம்படுத்தும். மின்சார வாகன தொழில்நுட்பத்தை முன்னேற்றம் காணச் செய்வதிலும் மற்றும் அதன் அக்கறைப் பங்காளர்களுக்கு மதிப்பை வழங்குவதிலும் இந்நிறுவனத்தின் பொறுப்புறுதியை இந்த அங்கீகாரம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இதற்கு முன்னதாக, ஈக்விட்டி பங்குகளின் முன்னுரிமை வெளியீடு வழியாக, ரூ.118.06 கோடி மற்றும் மாற்றத்தக்க வாரண்ட்டுகளின் முன்னுரிமை வெளியீடு வழியாக ரூ.362.25 கோடி என்ற மூலதன நிதியை இந்நிறுவனம் திரட்டியிருந்தது. முதலீட்டாளர்களின் எச் என் ஐ வகையினத்தில் எஃப் பி ஐஸ் ஃபோர்ப்ஸ் ஈ எம் எஃப், நெக்ஸ்பேக் லிமிடெட், எமினென்ஸ் குளோபல் ஃபண்டு பி சி சி, ஏ ஜி டைனமிக் ஃபண்ட்ஸ் லிமிடெட் ஆகியவற்றிற்கு வாரண்ட்டுகளை ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. திரட்டப்பட்டுள்ள ரூ.480 கோடி என்ற மொத்த நிதித்தொகையானது, நடப்பு மூலதனம், எலக்ட்ரிக் கார் உருவாக்கம், மூலதன விரிவாக்கம் ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்படும். இதன் தயாரிப்புகளது உற்பத்தியை இந்த நிதி திரட்டல் நடவடிக்கை உயர்த்துவதோடு, மூன்றாவது காலாண்டு முதல் இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் வாகனங்களின் எண்ணிக்கையையும் இது உயர்த்தக்கூடும். டெல்லி அரசின் சமீபத்திய சுற்றறிக்கையின்படி, மாநிலத்தின் வரம்பெல்லைக்குள் மெர்க்குரியின் எல்5 (6+1) வகையின வாகனத்தை இயக்குவதற்கான அனுமதி தரப்பட்டிருக்கிறது. இனிவரவிருக்கும் காலங்களில் இந்நிறுவனத்திற்கு புதிய சந்தை வாய்ப்புகளை இந்த உத்தரவு வழங்கும். மெர்க்குரி இவி டெக் லிமிடெட், மின்சார வாகனங்களுக்கான ஒட்டுமொத்த சூழலமைப்பிலும் தனது செயலிருப்பைக் கொண்டிருக்கின்ற ஒரு முன்னணி இவி நிறுவனமாக இயங்கி வருகிறது. 18 ஏக்கர் பரப்பில் ஒரு மிக நவீன, மின் - வாகன தொழில்நுட்ப பூங்காவையும் மற்றும் உற்பத்தி வளாகத்தையும் இது கொண்டிருக்கிறது. இந்நிறுவனம் "மெர்க்குரி" என்ற பிராண்டின் கீழ் பரந்த அளவிலான தயாரிப்புகளை வழங்கி வருகிறது. 1 டன் சுமை திறன் கொண்ட 'முசாக்' என்ற அதன் 4-சக்கர வாகனம் இதன் தயாரிப்பு அணிவரிசையில் தற்போது புதிதாக இணைந்திருக்கிறது.

## எம்ஓஎஸ் யுட்டிலிட்டி லிமிடெட்-ல் பங்குகளை வாங்கியிருக்கும் செயிண்ட் கேபிட்டல் ஃபண்டு, ஏஜி டைனமிக் ஃபண்ட்ஸ் மற்றும் பிற நிதி முதலீட்டு நிறுவனங்கள்!

சென்னை, 01 அக் 2024: தொழில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு மாறுபட்ட வகைகளில் ஃபின்டெக் மற்றும் யுட்டிலிட்டி பேமெண்ட் தீர்வுகளை வழங்கி வரும் ஒரு முன்னணி ஃபின்டெக் நிறுவனமாக எம்ஓஎஸ் யுட்டிலிட்டி லிமிடெட் இயங்கி வருகிறது. வாடிக்கையாளரை மையமாக கொண்ட அணுகுமுறையுடன் நிதிசார் உள்ளடக்கத்தையும் மற்றும் அணுகுவசதியையும் மேம்படுத்த எளிதான மற்றும் பாதுகாப்பான ஃபின்டெக் தீர்வுகளை வழங்குவதில் இந்நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. தேசிய பங்குச்சந்தையில் (என் எஸ் ஈ) பெரிய பரிவர்த்தனைகளுக்காக கிடைக்கப்பெறும் தரவின்படி 2024 செப்டம்பர் 26 - ம் தேதியன்று செயிண்ட் கேப்பிட்டல் ஃபண்டு, ஏ ஜி டைனமிக் ஃபண்ட்ஸ் லிமிடெட், மினர்வா வென்ச்சர்ஸ் ஃபண்டு, நெக்ஸ்பேக்ட் லிமிடெட் மற்றும் பிரிட்ஜ் இந்தியா ஃபண்டு ஆகிய நிதி முதலீட்டு நிறுவனங்கள் எம் ஓ எஸ் - லிமிடெட் - ல் பங்குகளை வாங்கியிருக்கின்றன. செயிண்ட் கேப்பிட்டல் ஃபண்டு, 15,40,000 பங்குகளையும், ஏஜி டைனமிக் ஃபண்ட்ஸ் 2,69,600 பங்குகளையும் வாங்கியிருக்கும் நிலையில், பிரிட்ஜ் இந்தியா ஃபண்டு 5,49,600 பங்குகளை வாங்கியிருக்கிறது. இந்தியாவில் புகழ்பெற்ற பெருநிறுவனங்களோடு செழுமையான மற்றும் சிறப்பான அனுபவத்தை எம் ஓ எஸ் கொண்டிருக்கிறது. பல்வேறு பிசினஸ் பெருநிறுவனங்களுக்கு வலைதளம் மற்றும் செயலி அடிப்படையிலான வங்கிச்சேவை / பயண / யுட்டிலிட்டி சேவைகளை எம்ஓஎஸ் வழங்கி வருகிறது. அனைத்து மக்களையும், தரப்பினரையும் நிதிசார் சேவைகளை பெறுபவர்களாக உள்ளடக்க வேண்டுமென்ற நோக்கத்தை முன்னெடுக்க பிரபல நடிகர் திரு. நவாசுதீன் சித்திகி - ஐ தனது பிராண்டு தூதராக எம்ஓஎஸ் நியமனம் செய்திருக்கிறது, இந்த முக்கியமான ஒத்துழைப்பின் வழியாக தனது நிதிசார் சேவைகளை அணுகிப் பெறுவது மிக எளிதானது என்ற கருத்தை வலியுறுத்த எம் ஓ எஸ் திட்டமிட்டிருக்கிறது. இந்தியாவெங்கிலும் தனிநபர்களின் மாறுபட்ட பல்வேறு தேவைகளை எப்படி தனது நிறுவனம் பூர்த்தி செய்கிறது என்று எடுத்துக்கூறுவது இதன் நோக்கங்களுள் ஒன்றாகும். எளிதாக இணைத்துப் பார்க்கக்கூடிய திரு. சித்திகி - ன் எளிமையான ஆளுமைத்தன்மை எம்ஓஎஸ் - ன் வாடிக்கையாளரை மையமாக கொண்ட அணுகுமுறையோடு மிகச்சிறப்பாக பொருந்துகிறது; சாமான்ய மக்களிடம் இது பரவலான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தியாவின் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் இவருக்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய ரசிகர் அடித்தளத்தோடு பிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நிதிசார் இடைவெளியை நிரப்பவும், பொருளாதார திறனதிகாரத்தின் சமூக முன்நகர்வையும் ஊக்குவிக்கவும் எம்ஓஎஸ் விழைகிறது. இந்த ஒத்துழைப்பின் காரணமாக எம்ஓஎஸ் - ன் விரிவான சேவைகளை காட்சிப்படுத்தும் பல்வேறு பிராண்டின் பரப்புரைகளில் திரு, நவாசுதீன் சித்திகி இடம்பெறுவார். பல்வேறு சமூக ஊடகங்களில் தன்னை பின்பற்றுபவர்கள் மத்தியிலும் மற்றும் விரிவான ரசிகர் அடித்தளத்திலும் இதன்மூலம் தாக்கத்தை ஏற்படுத்துவார். திரு. சித்திகி உடன் எம்ஓஎஸ் - ன் ஒத்துழைப்பானது, இந்த பிராண்டை பிரபலப்படுத்தவும், புதிய வாடிக்கையாளர்களையும் மற்றும் பாலிவுட் ரசிகர்களையும் ஈர்க்கவும் உதவும். திரு. சித்திகி - ன் பிரபல ரசிகர் அடித்தளம் மற்றும் அவருக்கு இருக்கும் சிறப்பான நற்பெயரை இந்த ஒத்துழைப்பு சிறப்பாக பயன்படுத்தி, சந்தையில் எம்ஓஎஸ் - ன் இருப்பை மேலும் வலுவாக்கும். இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணி அளவீடுகள், நடத்தை, தேவைப்பாடு, தரநிலைகள் மற்றும் இயக்க நடைமுறைகளின் கீழ் தனது புதிய பிராண்டு தூதரின் வழியாக தனது சந்தை இருப்பை உயர்த்துவது எம்ஓஎஸ் யுட்டிலிட்டி லிமிடெட் - ன் செயல்பாடாக இருக்கும். ஒப்பந்தம் கையெழுத்தாகும் தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலஅளவிற்கு இவ்வொப்பந்தம் அமலிலிருக்கும் மற்றும் இரு தரப்புகளாலும் பரஸ்பரமாக ஒப்புக்கொள்ளப்படும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இது நீடிக்கப்படலாம்.